# இலங்கையின் முதியோர்களுக்கான தேசிய கொள்கை

**முதியோர்களுக்கான தேசிய பேரவை**

**முதியோர்களுக்கான தேசிய செயலகம்**

**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு**

**2025**

முன்னுரை ..... 1
1.0 முதியோர்களுக்கான தேசிய கொள்கையின் தேவை ..... 3
2.0. தொலை நோக்கு ..... 3
3.0 பணிக்கூற்று ..... 4
4.0 அடிப்படைக் கோட்பாடுகள். ..... 5
5.0 கொள்கை நோக்கங்கள் ..... 7
6.0 பிரதான கொள்கைப் பகுதிகள் ..... 9
6.1 முதியோர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ..... 9
6.2 ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ..... 10
6.3 நிதிப் பாதுகாப்பு ..... 11
6.4 சமூகப் பாதுகாப்பு, ஈடுபாடு மற்றும் உட்படுத்துதல். ..... 12
6.5 நீண்டகாலப் பராமரிப்பு மற்றும் உதவிச் சேவைகள். ..... 14
6.6 வயதுகேற்ற சிநேக பூர்வ சூழல்கள். ..... 15
6.7 அவசரகாலத் தயார்நிலை ..... 16
6.8 நடைமுறைப்படுத்தும் சட்டகம் ..... 16
6.9. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு. ..... 17
6.10 பரிந்துரை, விழிப்புணர்வு மற்றும் தகவல் தொடர்பு ..... 18

**முன்னுரை**

இலங்கையில் முதியோர் சனத்தொகை வேகமாக அதிகரித்து வருவதால் ஒரு ஆழமான சனத்தொகை மாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. முதுமை என்பது ஒரு தவிர்க்க முடியாத ஒரு இயற்கையான நிகழ்வாகும். இது உடல் ரீதியான, மன ரீதியான மற்றும் சமூக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துகிறது. 60 வயதை பூர்த்தி செய்த யாவரும் முதியார் என வரையறுக்கப்படுகிறார்கள். இத்தகைய சனத்தொகை மாற்றம், நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் சுகாதார துறைகளில் முக்கிய சவால்களையும் வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் தேசிய முன்னேற்றத்தில் முதியோர்களின் மதிப்புமிக்க பங்களிப்புகளை உணர்ந்து, அவர்களின் உரிமைகள், கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாப்பது அவசியமாகிறது.
முதியோர்களுக்கான தேசியக் கொள்கை, அனைவரையும் உள்ளடக்கும், ஆதரவான மற்றும் முதியோர் சிநேகபூர்வ சமூகத்தை உருவாக்குவதில் இலங்கை அரசின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது. இது மெட்ரிட் முதியோர் செயல் திட்டம் (2002). ஐக்கிய நாடுகள் சபையின் ஆரோக்கியமான முதுமைக்கான தசாப்தம் (2021-2030) மற்றும் இலங்கையின் 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள். போன்ற சட்ட வடிவங்கள் இந்தக் கொள்கையை உருவாக்க பங்களிப்புச் செய்தன. இந்தக் கொள்கை, முதியவர்களின் பன்முகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், ஆரோக்கியமான மற்றும் வினைத்திறனான முதுமையை ஊக்குவிப்பதற்கும், தலைமுறைகளுக்கு இடையேயான ஒற்றுமையை வளர்ப்பதற்கும் ஒரு விரிவான கட்டமைப்பை வழங்குகிறது. ஒருங்கிணைந்த, சான்றுகள் சார்ந்த மற்றும் உரிமைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறைகள் மூலம், முதியோர்களை சுதந்திகைவும், பாதுகாப்பாகவும் மற்றும் மரியாதையுடன் வாழ வலுவூட்டுவதனை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தக் கொள்கையை செயல்படுத்துவதன் மூலம், இலங்கையின் அனைத்து தலைமுறையினரும் பரஸ்பர மரியாதை மற்றும் பொறுப்புடன் வாழக்கூடிய ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் நாம் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

## 1.0 முதியோர்களுக்கான தேசிய கொள்கையின் தேவை

தெற்காசியாவில் முதியோர் சனத் தொகை மிகவும் துரிதமாக வளர்ச்சியடையும் நாடொன்றாக இலங்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறைந்த பிறப்பு விகிதங்கள் மற்றும் அதிகரித்த ஆயுட்காலம் ஆகியவற்றால் ஒரு குறிப்பிடத்தக்க சனத்தொகை மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது. இவ்வாறு ஏற்படும் சவால்களை நிவர்த்தி செய்ய இலங்கையில் முதியோர்களுக்கான விரிவான தேசியக் கொள்கை அவசியமாகின்றது. தெற்காசியாவில் முதியோர் சனத்தொகை மிக துரித வளர்ச்சியடையும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதால், சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் **(2012:2024)** பிரகாரம், **60** வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத் தொகையின் விகிதம் 1981 இல் 6.6 சதவீதத்திலிருந்து **2012** இல் **12.4** சதவீதமாகவும், **2024** இல் **18.2** சதவீதமாகவும் இரட்டிப்பாகியுள்ளது.

இந்த சனத்தொகை மாற்றம் ஆழ்ந்த சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்துகின்ற அதேவளை முதியோர் சார்பு விகிதம் சீராக அதிகரித்து வருகிறது, இது பாரம்பரிய குடும்ப அடிப்படையிலான ஆதரவு அமைப்புகள் மற்றும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முதியோர் சேவைகள் இரண்டிலும் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

வரலாற்று ரீதியாக வயதானவர்களுக்கு ஆதரவாக இருக்கும் நீட்டிக்கப்பட்ட குடும்ப உறவுகள், குறிப்பாக தொழிலாளர் படை உறுப்பினர்களிடையே அதிகரித்து வரும் தொழிலாளர் இடம்பெயர்வு போக்குகளால் மேலும் பலவீனமடைந்துள்ளன. இதன் விளைவாக பல முதியோர்கள் தனிமையிலும், குறைந்த கவனிப்புடனும், சமூகத் தொடர்புகள் அற்றும் கவனிப்பற்று விடப்படுகிறார்கள்.மேலும் முதிய வயதுப் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு முதியோர் சனத் தொகையில் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட ஆயுட்காலம், குறைந்த வருமானம் மற்றும் நிதிப் பாதுகாப்பிற்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாக, முதிய வயதுப் பெண்கள் வறுமை, சமூக தனிமை மற்றும் உடல்நலம் தொடர்பான சவால்களுக்கு அதிக ஆபத்தில் உள்ளனர்.

முதுமை என்பது ஒரு இயற்கையான உயிரியல் செயல்முறை என்றாலும், அதன் சமூக, சுகாதார மற்றும் பொருளாதார விளைவுகளுக்கு அவசர மற்றும் முற்போக்கான கொள்கை பதில்கள் தேவைப்படுகின்றன. இலங்கையில் முதியவர்களின் நல்வாழ்வு, போதிய திட்டமிடல் இல்லாமை, முதுமையுடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகளின் அதிகரிப்பு, நிதிப் பாதுகாப்பின்மை மற்றும் சமூக விலகல் நிலை ஆகியவற்றால் கணிசமாக சவால்களை செய்யப்படுகிறது. மேலும், தற்போதுள்ள ஓய்வூதிய முறைகளின் நிலைத் தன்மையும் சிக்கலானது, இது சமூகப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பிற்கு மேலும் சவால்களை ஏற்படுத்துகிறது.

முதியோர் சனத்தொகை ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் பெரும் சொத்தாகக் கருதப்படுகிறது. அவர்கள் வெறும் பராமரிப்பு மற்றும் ஆதரவைப் பெறுபவர்கள் மட்டுமல்ல, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஆக்கபூர்வமாக பங்களிப்பவர்கள். இவர்களின் அனுபவம், அறிவு, மற்றும் வாழ்நாள் முழுவதும்

சேகரிக்கப்பட்ட திறன்கள், சமூகத்தின் பல்வேறு துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. ஓய்வு பெறும் பாரம்பரிய வயதைத் தாண்டி, முதியோர் சனத்தொகையில் கணிசமான பகுதியினர் பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறன் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இதற்கு அவர்களின் அனுபவம், அறிவு, மற்றும் திறன்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் ஒரு காத்திரமான சூழலை உருவாக்குவது அவசியமாகின்றது.

முதியோர்களுக்காக நன்கு வகுக்கப்பட்ட ஒரு தேசியக் கொள்கையின் மூலம் பலதரப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முக்கியமான கட்டமைப்பை வழங்க முடியும். இக்கொள்கையின் மூலம் செயற்திறனான மற்றும் ஆரோக்கியமான முதுமையை ஊக்குவித்தல் வேண்டும். தரமான முதியோர் பராமரிப்புக்கான சமமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிமுகம் செய்ய வேண்டும். அத்துடன் ஓய்வூதியங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான சேவைகள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுவூட்டுதல் வேண்டும். மேலும், முதியோர்கள் நெகிழ்வான வேலை வாய்ப்புக்கேற்ற மீள் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், மற்றும் தன்னார்வத் தொண்டு வாய்ப்புகள் மூலம் உற்பத்தித்திறனுடன் மற்றும் சமூக ரீதியாக ஈடுபாட்டுடன் இருக்க இந்தக் கொள்கை வழி வகுத்தல் வேண்டும்.

முக்கியமாக, இத்தகைய கொள்கையானது தலைமுறைகளுக்கிடையேயான சமத்துவத்தைப் பேணுவதற்கு மிகவும் அவசியமாகிறது. இது இளய மற்றும் முதியோர் தலைமுறையினருக்கிடையில் பரஸ்பர மரியாதையையும், ஆதரவையும் வளர்க்கும் மூலோபாய ரீதியாகத் திட்டமிடுவதன் மூலம், இலங்கை முதியோர் சனத்தொகை வளர்ச்சியால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்க முடியும் என்பதோடு. சுகாதாரம், முதியோர் பராமரிப்பு, மற்றும் வயதுக்கு ஏற்ற சேவைகள் ஆகியவற்றில் உருவாகும் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்புடையதாக இருக்கும். ஆகையால் முதியோர்களுக்கான தேசிய கொள்கையானது வெறுமனே பராமரிப்பு பற்றிய ஒரு விடயம் மாத்திரம் அல்லாமல். அது இலங்கையின் சமூக நல்லிணக்கம், பொருளாதார நிலைத் தன்மை, மற்றும் நீண்டகால தேசிய நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கான ஒரு மூலோபாயத் தேவையாகவும் இருக்க வேண்டும்.

## 2.0. தொலை நோக்கு

இலங்கையில் வாழும் முதியோர்கள் கௌரவம், சுதந்திரம் மற்றும் பாதுகாப்புடன் வாழ்வதை உறுதி செய்தல் மற்றும் சமமான சுகாதாரப் பாதுகாப்பு, வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் குடும்பம் மற்றும் சமூக வாழ்வில் பங்கேற்பதற்கான அர்த்தமுள்ள வாய்ப்புகளுடன் வாழ்வதற்கேற்ற சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

## 3.0 பணிக்கூற்று

(அ) முதியோர்களன் நலனைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும், உற்படுத்தப்பட்ட உரிமைகள் சார்ந்த அமைப்புகளை

உருவாக்குவது அவசியம். இந்த அமைப்புகள், முதியோர்கள் கண்ணியத்துடன், செயற்திறனாகவும், பாதுகாப்பாகவும் வாழ உதவுவதோடு, சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் அவர்கள் தொடர்ந்து பங்களிப்பதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குதல்.

(ஆ) பாலினம் அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனி நபர்களையும் வலுவூட்டுதல், . ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதன் மூலம் நம்பிக்கையுடன் முதுமைப் பருவத்திற்குத் தயாராகுதல், நிதிப் பாதுகாப்பு மற்றும் முதுமைப் பருவத்திற்கேற்ற நேர்மறைவான, வாழ்க்கைப் போக்கின் அணுகுமுறைகளை விருத்தி செய்தல்.

## 4.0 அடிப்படைக் கோட்பாடுகள்.

முதியேர்களுக்காக தயாரித்து நடைமுறைப்படுத்தும் இந்த தேசியக் கொள்கையானது, இலங்கையின் முதியோர் சனத்தொகையினரின் உரிமைகள், கண்ணியம் மற்றும் நல்வாழ்வை நிலைநிறுத்துவதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் முக்கிய வழிகாட்டும் கொள்கைகளின் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இக்கோட்பாடுகள் முதியோர் சனத் தொகையின் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் கொள்கை ரீதியான பதில்கள் உள்ளடங்கியதாகவும், சமமானதாகவும், மற்றும் நீடித்த நிலைப்புத்தன்மையுடையதாகவும் இருப்பதை உறுதிசெய்யும், ஒரு நெறிமுறை சார்ந்த மற்றும் மூலோபாய அடித்தளத்தை வழங்குகின்றன.

இந்தக் கொள்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் முதியோர்களுக்கான கோட்பாடுகள் மற்றும் முதியோர் குறித்த மெட்ரிட் சர்வதேச செயற் திட்டம் **(MIPAA)** உள்ளிட்ட முக்கிய சர்வதேச கட்டமைப்புகளுடன் இணங்கிச் செல்கின்றன. முதியோர்களுக்கு பயனுள்ள மற்றும் உரிமைகள் சார்ந்த கொள்கைகளை உருவாக்குவதற்கான அடிப்படை வழிகாட்டுதல்களாக இவை செயல்படுகின்றன. இந்த உலகளாவிய உறுதிப்பாடுகள் முதியோர்களின் சுதந்திரம், பங்கேற்பு, பராமரிப்பு, தன்நிறைவு மற்றும் கண்ணியம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் முக்கிய நோக்கம், இலங்கையில் உள்ள முதியவர்கள் பாதுகாப்பான, மரியாதையான, மற்றும் மனநிறைவான வாழ்க்கையை வாழ்வதை உறுதி செய்வதேயாகும். அதே சமயம், அவர்களின் அனுபவம் மற்றும் அறிவு, குடும்பம், சமூகம், மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்களிக்க உதவும் ஒரு சூழலை உருவாக்குவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த அணுகுமுறை, முதியோரை ஒரு சுமையாகப் பார்க்காமல், சமூகத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்களாகக் கருதுதல் வேண்டும்.

### 1. மனித உரிமைகள் மற்றும் கண்ணியம்

இலங்கையில் உள்ள அனைத்து முதியோர்களும் சமூகத்தின் சமமான, கண்ணியமான உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டதிட்டங்களுக்கு

இணங்கி சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பதற்கான உரிமை உண்டு. வயது மான பாகுபாடுகளும் அகற்றப்பட்டுளந்தவித அடிப்படையிலான, அவர்களுக்கு சமமான உரிமைகளும் வாய்ப்புக்களையும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்

**2. வாழ்க்கை முன்னேற்ற அணுகுமுறை மற்றும் தலைமுறைகளுக்கு இடையிலான ஒற்றுமை**

முதுமையடைதல் என்பது மனித வாழ்வின் ஒரு அங்கம் என்பதை அனைவரும் புரிந்துகொள்வதை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம், தலைமுறைகளுக்கு இடையே பரஸ்பர மரியாதை, ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட பொறுப்புணர்வு ஆகியவற்றை விருத்தி செய்தல்.

**3. சமத்துவம், உற்படுத்துதல் மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதை**

பாலினம், இருப்பிடம், திறன், இனம் அல்லது சமூகபொருளாதார நிலை ஆகியவற்றைப் - பொருட்படுத்தாமல், அனைத்து முதியோர்களுக்கும் வாய்ப்புக்களும், சேவைகளும் சமமாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய அதநேரத்தில் முதியோர் சனத் தொகையினரின் கலாச்சார, மத, மொழி மற்றும் தனிப்பட்ட பன்முகத்தன்மையை மதிக்க வேண்டும்.

**4. பாதுகாப்பு, வலுவூட்டல் மற்றும் நலிவுற்ற குழுக்களின் தன்னாட்சி உரிமை**

முதிய வயதுப் பெண்கள், மாற்றுத் திறனாளிகள், குடும்ப ஆதரவு இல்லாதவர்கள் மற்றும் மிகவும் கொடிய வறுமையில் உள்ள தனிநபர்கள் உட்பட, பலவீனமான நிலையில் உள்ள முதியோர்கள் முகங்கொடுக்கும் பல்வேறு குறைபாடுகளுக்கு முன்னுரிமையான பாதுகாப்பையும், வலுவூட்டல்களையும் வழங்குதல் வேண்டும். கொள்கைகள் சுயாட்சி மற்றும் சுயநிர்ணயத்தை ஆதரிக்கும், வயதானவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றிய தகவலறிந்த தெரிவுகளை மேற்கொள்ள உதவுகிறது.

**5. பங்கேற்பு மற்றும் செயலூக்கமான ஈடுபாடு**

முதியோர்கள் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் குடியுரிமை வாழ்வில் தொடர்ந்து பங்கேற்பதை மதிக்க வேண்டும்; அதை எளிதாக்க வேண்டும். கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தும்போது அவர்களின் கருத்துக்களை செயற்திறனாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**6. நிலைத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் பொறுப்புக்கள் பகிரப்படுதல்**

அரச திணைக்களங்கள், சிவில் சமூகம், குடும்பங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் நிலையான மற்றும் சமூக அடிப்படையிலான பராமரிப்பு மாதிரிகளை ஊக்குவிக்க வேண்டும். கொள்கைகள், சூழ்நிலைகளுக்கேற்ப, சனத்தொகை மற்றும் சமூக மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

**7. எளிதாக அணுகல் மற்றும் முழுமையான ஆதரவு**

முதியோர்களுக்கு சேவைகள், வசதிகள், சூழல்கள் மற்றும் தகவல்கள் உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அணுகுதற்கேற்ப எளிதாக்குதல். குறிப்பாக

அங்கவீனமுற்ற நபர்களுக்கும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். ஒரு முழுமையான அணுகுமுறையினை அறிமுகப்படுத்தும்போது உடல்நலத்தை மட்டுமல்லாமல், சமூக இணக்கம், உணர்ச்சி பூர்வமான நல்வாழ்வு மற்றும் நிதிப் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

### 8. ஆதார அடிப்படையிலான மற்றும் பொருத்தமான கொள்கை

தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நம்பகமான தரவு, ஆய்வு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி முறையான தகவல்களை வழங்க வேண்டும். இதன் மூலம் கொள்கைகள் தற்போதைய யதார்த்தங்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடியதாகவும், எதிர்கால சவால்களுடன் பரிணமிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

## 05. கொள்கை நோக்கங்கள்

முதியோர்களுக்கான இந்த தேசியக் கொள்கையானது, முதியோர்களின் கௌரவம், உரிமைகள் மற்றும் நலனைப் பாதுகாப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை எடுத்துரைக்கின்றது. இலங்கையில் அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகையினரில் தேவைகளை நிவர்த்தி செய்ய இந்தக் கொள்கை முழுமையான மற்றும் உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை பின்பற்றுகிறது. இது தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் ஒத்துப்போகும் வகையிலும், மற்றும் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் உத்திகளுக்கும் துணைபுரிகிறது.

பின்வரும் கொள்கை நோக்கங்கள் நடவடிக்கைகளுக்கான தெளிவான வழிகாட்டுதலை வழங்குகினடறது, பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை எளிதாக்கவும் மற்றும் பயனுள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை செயல்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன:

### 01. முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நிலை நிறுத்துதல்.

முதியோர்களின் உரிமைகளையும், பாகுபாடின்மையும் உறுதி செய்யப்படுதல் வேண்டுவதோடு, தேசிய சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முதியோர்களுக்கான கோட்பாடுகள், முதுமை குறித்த மாட்ரிட் சர்வதேச செயல் திட்டம் **(MIPAA)** உள்ளிட்ட சர்வதேச உறுதிப்பாடுகளுக்கு இணங்கிச் செல்ல வேண்டும்.

### 02. வயதுக்கு ஏற்ற சிநேகபூர்வ மற்றும் எளிதாக அணுகக்கூடிய சூழல்களை மேம்படுத்துதல்.

முதியோர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உகந்த உடலியல் மற்றும் சமூக சூழலினைக் கருத்திற்கொள்ளுகின்ற அதேவேளை  சிநேக பூர்வ உள்கட்டமைப்பு , வீட்டு வசதிகள் மற்றும் போக்குவரத்து என்பன சுதந்திரமாகவும், கௌரவாகவும் வாழ்வதற்கேற்ற வித்தில் அமைத்தல் வேண்டும்.

**03. சுகாதாரப் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்**

முதியோர்களுக்கான சுகாதார மேம்பாடு, நோய் தடுப்பு, முதியோர் மருத்துவப் பராமரிப்பு, மனநல சேவைகள், வாழ்நாள் இறுதிப் பராமரிப்பு, நோய்த்தடுப்ப பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு போன்றன விரிவான, மலிவு விலையிலான மற்றும் தரமான சுகாதார சேவைகளுக்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல் வேண்டும்.

**04. பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உதவி**

வலுவூட்டப்பட்ட மற்றும் நிலையான ஓய்வூதியத் திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் பணியிடத்திலோ அல்லது மாற்று வாழ்வாதாரங்களிலோ தொடர்ச்சியான ஈடுபாட்டிற்கான வாய்ப்புகள் மூலம் முதியோருக்கான வருமானப் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும்.

**05. சமூக ஈடுபாடு மற்றும் பங்கேற்பை உறுதி செய்தல்**

முதியோர்கள் குடும்பம், சமூகம், கலாச்சார மற்றும் குடியுரிமை வாழ்வில் செயற்திறனாக ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும். தனிமையைக் குறைப்பதிலும், தலைமுறைகளுக்கு இடையேயான ஒற்றுமையை ஆதரிப்பதிலும் குறிப்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

**06. நீண்டகால, இடைநிலை, நோய்த்தடுப்பு மற்றும் தற்காலிகப் பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்துதல்**

சமூக அடிப்படையிலான, நிறுவன மற்றும் வீட்டு அடிப்படையிலான சேவைகள் உட்பட முறையான மற்றும் முறைசாரா பராமரிப்பு அமைப்புகளை விரிவுபடுத்தி மேம்படுத்துதல் வேண்டும். அதே நேரத்தில், பராமரிப்பாளர்களுக்கு ஆதரவை மேம்படுத்துவதுடன், ஒத்துணர்வுடனான (empathetic) இடைத் தங்கள் பராமரிப்பு வசதிகள், நீண்டகால மற்றும் தற்காலிகப் பராமரிப்பிற்கான சேவைகளை உறுதி செய்ய வேண்டும்.

**07. வாழ்க்கைப் பாட அணுகுமுறைகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் இணக்கத்தை மேம்படுத்துதல்**

தேசிய அபிவிருத்தித் திட்டமிடலின்போது துறைகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த முதுமையடைதலை ஊக்குவிக்கின்ற அதேநேரம் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான முதுமைக்கான ஆயத்தத்தை வலியுறுத்தும் வாழ்க்கைப் பாடக் கண்ணோட்டத்தைப் பயன்படுத்துதல்.

**08. ஆதார அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல் மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்**

கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு தரவு சேகரிப்பு, ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான வலுவான அமைப்புகளை ஸ்தாபிக்கின்ற அதேவேளை, விளைவுகளை மதிப்பிடுதல் மற்றும் வெளிப்படைத் தன்மை, நிலைத் தன்மை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் உறுதி செய்தல்.

## 06. பிரதான கொள்கைப் பகுதிகள்

### 6.1 முதியோர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு

இலங்கையில் முதியோர் சமூதாயத்தினரின் கௌரவம், சுதந்திரம் மற்றும் பாதுகாப்பைப் உறுதிப்படுத்தும் வகையில், அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்வேண்டும் இதில் துஷ்பிரயோகம், பாகுபாடு மற்றும் புறக்கணிப்பிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல், குறிப்பாக முதிய வயதுப் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்கள் மீது விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

முதியோர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நேரங்களில் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்கான சட்டப் பாதுகாப்புகளை வலுப்படுத்த சட்டத்தைத் திருத்தி அறிமுகப்படுத்துதல். துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, வன்முறை மற்றும் சுரண்டல் போன்றவற்றிலிருந்து முதியோர்களைப் பாதுகாக்கும் சட்டங்களை வலுவாக அமுல்படுத்துவதற்கான விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல்; சட்ட சேவைகள் மற்றும் பரிகாரங்களை வசதியாக அணுகுதல். தொழில்நுட்ப - வசதிகளால் ஏற்படும் வன்முறைகள், ஒன்லைன் மோசடிகள், டிஜிட்டல் துன்புறுத்தல் மற்றும் நிதி சுரண்டல் போன்ற வளர்ச்சியடைந்து வரும் தீங்குகளிலிருந்து முதியோர்களைப் பாதுகாத்தல்.

- முதியோர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கேற்ற சட்டங்களை இயற்றுதல் மற்றும் அதனை வலுவாக அமுல்படுத்துதல்.
- முதியோர்களை இலக்காகக் கொண்ட குற்றங்களை பயனுள்ள விதத்தில் விசாரித்து வழக்குத் தொடருவதை உறுதி செய்வதற்கு குறிப்பிட்ட நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துதல்.
- **கலாச்சாரம், மனப்பான்மை மற்றும் பங்கேற்பு:** சமூக-கலாச்சார உணர்திறனை வளர்ப்பத்தல், முதியோர்களின் பங்கேற்பினை மதித்தல் மற்றும் முதியோர் துஷ்பிரயோகத்திலிருந்து விடுபடுதல், முதுமை குறித்த வயது வேறுபாடு மற்றும் சமூகத்திலுள்ள தவறான கருத்துக்களை வன்மையாக கண்டித்தல்.
- **சமத்துவமான சேவைகள்:** சனத்தொகை மற்றும் சமூக-பொருளாதார நிலை மற்றும்/அல்லது புவியியல் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல், முதியோர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உதவிச் சேவைகளுக்கான சமமான வசதிகளை உறுதிப்படுத்துதல்.
- **சட்டங்கள் மற்றும் விதி முறைகளை நடைமுறைப்படுத்துதல்**: முதியோர் சமூகம் மற்றும் சேவை வழங்குநர் தொடர்பிலான விழிப்புணர்வுகளை மேம்படுத்துதல், முதியோர் உரிமைகள் சட்டத்தை திறன்பட

நிலைநிறுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகள் மற்றும் நடைமுறைகளை வழிமுறைகளை மேம்படுத்துதல்.

- **அரசாங்கத்தின் கொள்கை தயாரிப்பு**: கொள்கை தீர்மானங்கள் மற்றும் புதிய முயற்சிகளை எடுக்கும்போது, முதியோர்களின் உடல்நலம், சமூகப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவர்களின் ஆரோக்கியத்தை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 6.2 ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

முதியோர்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் ஊக்குவிப்பதனூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும், சுதந்திரத்தையும், சமூகத்தின் செயலூக்கமான பங்களிப்பைப் பேணுவதற்கு அவசியமாகின்றது. இதற்காக முதியோர்களின் உடல், உள மற்றும் சமூகத் தேவைகளுக்கு ஏற்றவாறு மலிவு விலையிலான மற்றும் பரந்த சுகாதார சேவைகள் தேவைப்படுகின்றது. நாள்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், உளநல விருத்தி, பாலியல் மற்றும் இனப் பெருக்க சுகாதாரம் மற்றும் ஒத்துணர்வு மிக்க பராமரிப்பாளர் உதவி ஆகியவற்றில் முக்கியத்துவம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

**தரமான சுகாதாரச் சேவைகளுக்கான அணுகல் வசதிகள்:** முதியோர்கள் அனைத்து மட்டங்களிலும் முழுமையான சுகாதாரச் சேவைகளையும் சமமாகப் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும். இதில் குணப்படுத்தும் சிகிச்சை, தடுப்பு முறைகள், புனர்வாழ்வு, நோய்த்தடுப்பு ( வரும் முன் பாதுகாத்தல் மற்றும் வாழ்வின் கடைசித் தருணத்தின் இறுதிப் பராமரிப்பு ஆகியவை அடங்கும். முதியோர்களுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்காக, ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு வசதிகளை வலுவூட்டுதல் வேண்டும். இடைநிலைப் பராமரிப்பு வழிமுறைகளை ஊக்குவித்தல், தரப்படுத்தலுக்கான மதிப்பீட்டுக் கருவிகளை பயன்படுத்துதல், பல்துறை சார்ந்த சார்ந்த குழுக்களை உருவாக்குதல், புனர்வாழ்வுச் சேவைகள், விழிப்புணர்வு மற்றும் குடும்ப சமூக சார்ந்த பராமரிப்பு, பணியாளர்களின் திறன்களை விருத்தி செய்தல், பயிற்சி மற்றும் வாய்ப்புக்களை வழங்குதல், சமத்துவமான மற்றும் குறைந்த செலவிலான உதவிச் சேவைகளை வழங்குதல்.

- **ஆரோக்கியமான முதுமைக்கான முயற்சிகள்:** வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளுக்கான மற்றும் உள நன்னிலையினை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள், விழிப்புணர்வுகள் மற்றும் திறன் விருத்திகளை ஊக்குவித்தல். முதியோர்களுக்கு ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளின் சுமையைக் குறைப்பதற்காக, பராமரிப்பாளர்களுக்கான உதவித் திட்டங்கள் மற்றும் வினைத்திறனான முதுமைப் பருவத்தினை ஊக்குவிக்க வேண்டும்.

- **நோய் தடுப்பு மற்றும் முகாமைத்துவம்:** முதியோர்களைப் பாதிக்கும் தொற்று மற்றும் தொற்றாத நோய்களைத் தடுத்தல், உரிய நேரத்தில் சிகிச்சை அளித்தல் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் போன்றிற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். சமுதாய அடிப்படையிலான பொருத்தமான தடுப்பூசித் பிரச்சாரங்களை ஊக்குவிப்பதும் இதில் உள்ளடக்கலாம்.
- **தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள்:** முதியோர்களுக்கான சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும் தொலை நிலை மருத்துவம் (telemedicine), செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்
- **சிகிச்சை அணுகுமுறைகள்** : நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பன்முக மருத்துவ முறைகளிலும், அதாவது மேற்கத்திய மருத்துவம் மற்றும் பாரம்பரிய மற்றும் இணைந்த மருத்துவ முறைகள் உட்பட, பொருத்தமான ஆய்வுகள், சிகிச்சைகள் மற்றும் சிகிச்சை முறைகளுக்கு மலிவான, சரியான நேரத்தில் மற்றும் சமமான அணுகலை உறுதி செய்ய வேண்டும்.

### 6.3 நிதிப் பாதுகாப்பு

முதியோர்கள் கௌரவமாக வாழ்வதற்கு பொருளாதார ஸ்திரத்தன்மை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு மிகவும் அவசியமாகின்றது. இதற்கு உறுதியான ஓய்வூதியத் திட்டங்கள், தொடர்ச்சியான பொருளாதாரப் பங்களிப்புக்கான வாய்ப்புகள், மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய முதியோர்களை மையமாகக் கொண்ட நிதி உதவித் திட்டங்கள் போன்றனவும் மிகவும் அவசியமாகுகிறது.

***பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்***

- **ஓய்வூதிய சீர்திருத்தம்:** முதியோர்களிடையே வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் மற்றும் புதுமையான மாதிரிகள் மூலம் உலகளாவிய ஓய்வூதிய காப்புறுதித் திட்டங்களினூடாக நிலைத்தன்மையையும் போதுமான தன்மையையும் உறுதி செய்தல் வேண்டும்.
- **வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உதவி:** முதியோர்களின் தொடர்ச்சியான பொருளாதார ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான, இணக்கமுள்ள வேலை வாய்ப்புக்கள், பகுதிநேர வேலை வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஊக்குவித்தல் வேண்டும்.
- **நிதி ஊக்குவிப்புக்கள்** : சிரேஷ்ட பிரஜைகளின் பொருளாதார பாதுகாப்பை மேம்படுத்தும் வகையிலான வரிச் சலுகைகள், சேமிப்புக்கான முன்னுரிமை வட்டி விகிதங்கள், குறைந்த வருமானம் கொண்ட முதிய்யோர்களுக்கு நிதி உதவித் திட்டங்கள் மற்றும் பங்களிப்பற்ற காப்புறுதித் திட்டங்களை அடைவதற்கான சலுகைகளை வழங்குதல்.

- **பொருளாதாரக் கல்வி அறிவு** : சேமிப்பு, வருமானம் மற்றும் செலவின முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை வழங்குதல் மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவம் டிஜிட்டல் கல்வியறிவுக்கு முன்னுரிமை வழங்குதல்.

## 6.4 சமூகப் பாதுகாப்பு, ஈடுபாடு மற்றும் உட்படுத்துதல்.

முதியோர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் சமூக ஈடுபாடும், முழுமையான பங்களிப்பும் மிகவும் அவசியமாகின்றன. முதியோர்கள் சமூக, கலாச்சார மற்றும் குடியியல் சார்ந்த வாழ்க்கையில் முதியோர் முழுமையாகப் பங்கேற்கும் சூழலை உருவாக்குவதற்கு கொள்கைகள் துணைபுரிய வேண்டும் . தனிமைப்படுத்தலைக் குறைத்து, உடைமை என்ற உணர்வை ஊக்குவித்தல். வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் உதவி சேவைகளுக்கான அணுகுமுறைகளுடன் அவர்களின் தன்னாட்சி மற்றும் சமூகத்திற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவது முக்கியமாகின்றது.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

- **முதியோர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்:** முதியோர்கள் தங்கள் அறிவு மற்றும் அனுபவங்களைச் செயற்திறனாகப் பகிர்ந்து கொள்வதன் மூலம் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சமூதாயத்திற்கு ஊக்குவிப்பாளர்களாக விளங்குகின்றனர். அவர்கள் சமூக மற்றும் தன்னார்வ நடவடிக்கைகளில் பங்கேற்பதுடன், தலைமுறைகளுக்கிடையேயான ஒற்றுமையை வளர்த்தும் வருகின்றனர். இதனால் சமூக ஒற்றுமை வலுப்பெற்று, சமூக மீள வலியுறுத்தல் மேம்படுகிறது. மேலும், அவர்கள் சமூகத்தின் மதிப்புமிக்க மற்றும் செயலூக்கமான உறுப்பினர்களாக வலுவூட்டப்படுதல் வேண்டும்.

- சமூகப் பங்கேற்பு, தன்னார்வத் தொண்டு மற்றும் முதியோர்களுக்கிடையேயான பரஸ்பர ஆதரவை ஊக்குவிக்கும் வகையிலான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல் அவசியமாகும். இத்தகைய முயற்சிகள் சமூகத் தனிமைப்படுத்தலைக் குறைத்து, உறுதிப்படுத்தப்பட்ட உதவி வலைப்பின்னலை உருவாக்கி, சமூகங்களுக்குள் தலைமுறைகளுக்கிடையேயான ஒற்றுமையை வலுப்படுத்தும்.

- **தலைமுறைகளுக்கிடையேயான உறவுகள்**: இளைய மற்றும் மூத்த தலைமுறையினரிடையே பரஸ்பர மரியாதை, புரிதல் மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கும் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகளை ஊக்குவித்தல். இத்தகைய திட்டங்கள் தலைமுறை இடைவெளிகளைக் குறைக்கவும், குடும்பம் மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்தவும் உதவுகின்றன, இதில் நேர்மறையான அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளை மேம்படுத்த வாழ்க்கை முறை அணுகுமுறையைப் பயன்படுத்துதல் வேண்டும்.

- **சமூக ஈடுபாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகள்** : பகல் நேர மையங்கள், பகல் பராமரிப்பு மையங்கள் சிரேஷ்ட பிரஜைகள் சங்கங்கள் போன்ற சமூக தொடர்பு மற்றும் ஊக்குவித்தலுக்கான முக்கிய இடங்களை ஸ்தாபிப்பதற்காக முதலீடு செய்தல் வேண்டும். இந்த வசதிகளை ஏற்படுத்துவதனூடாக அனைவரும் சமமாக அணுகக்கூடிய வகையில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வதுடன், முதியோர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.
- **வாழ்நாள் முழுவதும் கற்றல்:** முதியோர்கள் முறையான மற்றும் முறைசாரா கல்வி, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் திறன் ஊக்குவிப்பு நடவடிக்கைளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல் வேண்டும். நவீன உலகில் முதியோர்கள் செயல்பட உதவும் வகையில் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவதும், திறந்த வெளிப் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கான வசகதிகளை ஏற்படுத்துதல். தொழில்நுட்பத்தை நம்பிக்கையுடன் பயன்படுத்த, தகவல் மற்றும் சேவைகளை பெறுவதற்கும், மற்றவர்களுடன் தொர்பு கொள்வதற்கும், குடியியல் மற்றும் சமூக வாழ்க்கையில் பங்கேற்பதற்கும், கற்றல் வாய்ப்புகள் அணுகக்கூடியதாகவும், வயதுக்கு ஏற்றதாகவும், பல மொழிகள் மற்றும் வடிவங்களில் கிடைப்பதை உறுதி செய்யவும் உகந்த, டிஜிட்டல் திறன்களை மேம்படுத்துதல் வேண்டும்.
- **சமூக உதவிச் சேவைகள்:** தொடர்பு கொள்ளக்கூடிய இலகுவான உதவி எண்கள், பராமரிப்பாளர் உதவி மற்றும் வீட்டு உதவிச் சேவைகள் போன்றவற்றினை மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல். பெற்றுக் கொள்வதற்காக முதியோர்களுக்கான வீட்டு உதவிப் பராமரிப்பாளர் ஆதரவு திட்டங்கள் மற்றும் வீட்டு உதவி சேவைகள். சுதந்திரமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் சமூக மானியங்கள் மற்றும் பாதுகாப்பு வலையமைப்புக்களுடன், உதவி உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பங்களின் மலிவுத் தன்மை மற்றும் அவை கிடைப்பதற்கான இலகுத் தன்மைகளை உறுதி செய்தல் வேண்டும்.

### 6.5 நீண்டகாலப் பராமரிப்பு மற்றும் உதவிச் சேவைகள்.

நாளாந்த வாழ்க்கைச் செயல்பாடுகளுக்குத் தொடர்ச்சியான உதவி தேவைப்படும் முதியோர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய, விரிவான மற்றும் தரமான நீண்டகாலப் பராமரிப்பு சேவைகள் மிகவும் அவசியமாகின்றது. இதில் வீட்டுப் பராமரிப்பு முதல் நிறுவன வசதிகள் வரையிலான தொடர்ச்சியான பராமரிப்புக்கள் இதில் உள்ளடங்கப்படும். இது முதியோர்களுக்கு பாதுகாப்பான மற்றும் கௌரவமான சூழலில் பொருத்தமான உதவியினைப் பெறுவதை உறுதி செய்தல்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்.*

- **நீண்டகாலப் பராமரிப்புக்களைத் தரப்படுத்துதல்.:** வதிவிடப் பராமரிப்பு நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான பராமரிப்பு நிலையங்கள் மற்றும் வீட்டுப் பராமரிப்பு வழங்குநர்கள் உட்பட அனைத்து முதியோர் பராமரிப்பு சேவைகளுக்கும் உறுதியானதும், நம்பகத் தன்மையானதுமான பதிவு முறைகள், வழிகாட்டல்கள் மற்றும் தர நிர்ணயங்களை உருவாக்கிச் செயல்படுத்துதல் வேண்டும். இதன் மூலம் அனைத்துப் பராமரிப்புச் சூழல்களிலும், நிலையானதும், பாதுகாப்பானதும் மற்றும் தனிநபரை மையப்படுத்திய பராமரிப்பை உறுதிப்படுத்த முடியும். அரச மற்றும் தனியார் துறை நீண்டகால பராமரிப்பு வசதிகள் மற்றும் ஆதரவு சேவைகள் இரண்டும் முதியோர்களுக்கான தேசிய பேரவையின் வழிகாட்டுதலின் மூலம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
- **பராமரிப்பாளர் திறன் விருத்தி மற்றும் உதவி:** குறுகியகால மற்றும் இடைக் கால பயிற்சிகளைச் செயல்படுத்துவதன் மூலம் பயிற்சி பெற்ற பராமரிப்பாளர்களின் குறைபாடுகளைப் போக்கலாம். தொழில்வாண்மையிலான பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு உயர்தரப் பராமரிப்பை வழங்குவதற்குத் தேவையான திறன்களை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் வேண்டும். மன உளைச்சலைத் தடுக்கவும், பராமரிப்பின் விளைவுகளை மேம்படுத்தவும் பராமரிப்பாளர்களுக்கு நிதி உதவியினை வழங்குதல் வேண்டும். தற்காலிகப் பராமரிப்பு விருப்பங்கள் மற்றும் மனவெழுச்சிசார் உளவியல் தலையீடுகளை வழங்குதல் வேண்டும். தரங்களைப் பராமரிக்கவும், அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன்களை விரிவாக்குதல். தற்போதுள்ள அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களை வழக்கமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளுடன் வலுவூட்டுதல் வேண்டும்.

- **நீண்டகாலப் பராமரிப்புப் பணியாளர்களை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்:** நீண்டகாலப் பராமரிப்புப் பணியாளர்களின் மதிப்பீடு மற்றும் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் வழங்குவதை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். எதிர்காலப் பணியாளர் தேவைகளுக்கான முன்னறிவிப்பு மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு, பயிற்சி பெற்ற பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும், தக்கவைத்துக் கொள்வதையும் வலுப்படுத்த வேண்டும்.

- **நீண்டகாலப் பராமரிப்பிற்கான கட்டுப்படியான மற்றும் சமமான அணுகல்:** குறைந்த வருவாய் மற்றும் நலிவுற்ற முதியோர்களுக்கான நீண்டகாலப் பராமரிப்புப் பொதிகளை வழங்க வேண்டும். அனைத்து முதியோர்களுக்கும் பரந்த பாதுகாப்புடன் நீண்டகாலப் பராமரிப்புக் காப்புறுதி அமைப்புகளை வலுவூட்டுதல் வேண்டும். குறிப்பாக வீட்டை மையமாகக் கொண்ட பராமரிப்பை வழங்குவதில், பராமரிப்பு விநியோகத்தை மேம்படுத்த தொழில்நுட்பத்தை ஆரம்பித்துச் செயற்படுத்துதல் வேண்டும்.

## 6.6 வயதுகேற்ற சிநேக பூர்வ சூழல்கள்.

முதியோரின் பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் சுறுசுறுப்பான பங்கேற்புக்கு ஆதரவான சூழல்களை உருவாக்குவதானது அவர்களின் நல்வாழ்வுக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் அடிப்படையாகும்வயதுக்கு ஏற்ற . சிநேகபூர்வ சூழல்கள், முதியோர்கள் தங்கள் சமூகங்களுக்குள் வசதியாக வாழ உதவும் வகையில், உடல் ரீதியான, சமூக ரீதியான மற்றும் சேவை தொடர்பான காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

- **இலகுவான வாழ்விடங்கள்:** முதியோர்கள் சுதந்திரமாகவும், கண்ணியத்துடனும் வாழ உதவும் வகையிலான வாழ்விடங்களை ஊக்குவித்தல். வயதுக்கு ஏற்ற வடிவமைப்புத் தத்துவங்களை உள்ளடக்கிய, கட்டுப்படியான விலைகள், பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய வீட்டு வசதிகளுக்கான தீர்வுகளை ஊக்குவிக்க வேண்டும்.

- **வதிவிடப் பராமரிப்பு விதிமுறைகள்:** நீண்ட கால வதிவிடப் பராமரிப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களின் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்கி அமல்படுத்துகின்ற அதேநேரம் அவை பாதுகாப்புடனும், மனிதநேய மற்றும் நுட்பங்களுடனான சூழலாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

- **பொது உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள்:** பொது இடங்கள், போக்குவரத்து அமைப்புகள், நடைபாதைகள், பூங்காக்கள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு ஆகியவற்றின் பிரவேசிப்பு பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். முதியோர்களுக்கு இயக்கம்

மற்றும் சமூக பங்கேற்பை எளிதாக்குதல், பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்யும் வகையில், முதியோர்களுக்கு ஏற்ற பொது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்.

## 6.7 அவசரகாலத் தயார்நிலை

அவசரநிலைகள் மற்றும் அனர்த்தங்களின் போது முதியோர்கள் பெரும்பாலும் அதிக பாதிப்புக்குள்ளாகிறார்கள்எனவே ., தயார்நிலை, பிரதிபலித்தல் மற்றும் மீட்புக்கான அனைத்து நிலைகளிலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைத் திட்டமிடுதல்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

- **அவசரகாலப் பிரதிபலிப்பு அமைப்புகள்:** இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரழிவுகளில் முதியோரின் தேவைகளுக்கு ஏற்ப அவசரகால நெறிமுறைகளை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். பிரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முதலுதவி மற்றும் விரைவான உதவிக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.
- **உட்படுத்தப்பட்ட அனர்த்த திட்டமிடலில்:** காலநிலை மாற்றம், பெருந்தொற்று நோய்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் வகையில், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நெருக்கடி முகாமைத்துவத் திட்டங்கள் முதியோரின் தேவைகளையும், கருத்துக்களையும் முழுமையாக உள்ளடக்குவதை உறுதி செய்ய வேண்டும்.
- **விசேட சுகாதார மற்றும் சமூக சேவைகள்:** அவசரகாலங்களில் முதியோர்களுக்கு அவசியமான மற்றும் தொடர்ச்சியான மருத்துவ உதவி, நடமாடும் உதவி மற்றும் உளவியல் சமூக தலையீட்டு அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.

## 6.8 நடைமுறைப்படுத்துதல் சட்டகம்

முதியோர்களுக்கான தேசியக் கொள்கையினை வெற்றிகரமாகச் செயல்படுத்த, நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள், போதுமான வளங்கள் மற்றும் தரவு அடிப்படையிலான தீர்மானம் எடுப்பது அவசியமாகும். இதன் மூலம், பயனுள்ள மற்றும் நிலையான விளைவுகளை உறுதிப்படுத்த முடியும்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

- **துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு:** முதியோர் கொள்கைக்கு ஒரு ஒருங்கிணைந்த மற்றும் பயனுள்ள அணுகுமுறையை உறுதி செய்வதற்காக, அரச முகவர் நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் சமூகக் குழுக்களுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும்.

- பணியாளர்கள்: முதியோர்களுக்கான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்த பணியாளர்களை வலுப்படுத்துதல்.

- **பொது-தனியார் கூட்டாண்மைகள்:** வளப் பயன்பாடு, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, பொது நிறுவனங்களுக்கும், தனியார் பங்குதாரர்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்புக்களை ஊக்குவிக்க வேண்டும்.

- **வரவு - செலவு ஒதுக்கீடு மற்றும் வளத் திரட்டுதல்:** கொள்கையின் முன்னுரிமைகளுடன் சீரமைக்கப்பட்ட போதுமான மற்றும் நீடித்த நிதியை ஒதுக்க வேண்டும். அதே நேரத்தில், முதியோர் நலன்புரி சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு புதுமையான நிதி வழிமுறைகளை ஆராய வேண்டும்.

- **ஆதார அடிப்படையிலான அணுகுமுறைகள்:** தரவு சேகரிப்பு அமைப்புகளை மேம்படுத்தி, ஆராய்ச்சி திறனை வளர்த்து, முதியோர் குறித்த கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்குத் தேவையான தகவல்களை வழங்க, ஒரு மையப்படுத்தப்பட்ட தேசியக் களஞ்சியத்தை நிறுவுதல் வேண்டும்.

## 6.9. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.

கொள்கையின் பொருத்தப்பாடு, செயல்திறன் மற்றும் முதியோர்களின் மாறிவரும் தேவைகளுக்கு முகங்கொடுக்கும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்ய தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மிகவும் அவசியமாகின்றது.

***பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்.***

- **பல்துறைசார் கண்காணிப்பு:** முன்னேற்றம் மற்றும் தாக்கத்தை கண்காணிக்க, பல்வேறு துறைகளில் விரிவான கண்காணிப்பு சட்டகம் மற்றும் விளைவு குறிகாட்டிகளை உருவாக்குதல் வேண்டும்.

- **சுயாதீன மேற்பார்வை:** அரசியல் தலைமையின் ஆதரவுடன், வழக்கமான மதிப்பீடுகளை வழிநடாத்தவும், பொறுப்புணர்வை உறுதிப்படுத்தவும் ஒரு தன்னார்வ முகவர் அமைப்பை ஸ்தாபித்தல் வேண்டும்.

- **காலத்திற்கான மீளாய்வுகள்:** குறைபாடுகளைக் கண்டறியவும், கொள்கை மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளுக்குத் தகவல்களை வழங்கவும், முறையான, சரியான நேரத்தில் மதிப்பீடுகளை நடாத்த வேண்டும்.

## 6.10 பரிந்துரை, விழிப்புணர்வு மற்றும் தகவல் தொடர்பு

முதியோர்களின் உள்ளடக்கம் மற்றும் நல்வாழ்வை அங்கீகரிக்க, முதுமை குறித்த சமூகப் புரிதலையும் நேர்மறையான மனப்பான்மைகளையும் உருவாக்குவது அவசியம்.

*பிரதான மூலோபாய வழிகாட்டல்கள்*

- **பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள்:** மரியாதையை ஊக்குவிக்கவும், முதுமை பாகுபாட்டை எதிர்க்கவும், முதுமை மற்றும் முதியோர் உரிமைகள் குறித்த துல்லியமான தகவல்களை வழங்கவும் பிரச்சாரங்களைத் ஆரம்பிக்க வேண்டும்.
- **சமூகப் பங்கேற்பு:** பரிந்துரை மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் செயல்முறைகளில் முதியோர்கள் முழுமையாகப் பங்கேற்பதற்கான அதிகாரம் வழங்குதல் வேண்டும்.
- **ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு:** முதியோர் உரிமைகள், கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் ஆரோக்கியமான முதுமைப் பழக்கவழக்கங்கள் குறித்த தகவல்களைப் பரப்ப பல்வேறு ஊடக தளங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- **திறன் மேம்பாடு:** சேவை வழங்குநர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு முதுமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நடைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும்.